# வித்யாலயச் செய்திகள்

கோவை, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய நிறுவனங்களின் அரையாண்டுச் செய்திமடல்

பகுதி 7 | வெளியீடு 1 | ஜனவரி-ஜூன் 2004







## பதிப்பாசிரியரிடமிருந்து.........

அன்பார்ந்த நண்பர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களே!

முதலில் உங்கள் அனைவருக்கும் எங்கள் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பின்வரும் பக்கங்களில் கூறப்பட்டுள்ள செயல்பாடுகள், நம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மிகச் சிறப்பாகப் பாராட்டத்தக்க சாதனைகளாகும். மாணவர்களின் முழு ஆளுமையை வளர்ப்பதற்குத் துணைபுரியும் பள்ளி இணைச் செயல்கள் மற்றும் புறச்செயல்பாடுகள் இவற்றைக் கைவிடாத நிலையிலும், நம் பள்ளிகளின் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பின் பொதுத்தேர்வு முடிவுகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் பெற்றுள்ளது. ஆர்வமுள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் நம் சமுதாய பாலிடெக்னிக் பயிற்சியாளர்களுக்காக இந்த ஆண்டு ஒரு இசை ஆசிரியரை நாம் அமர்த்தியிருக்கிறோம். பக்தியுடன் கலந்த நாட்டியமும் இசையும் மனதில் பரிபூர்ண தாக்கத்தை ஏற்படுத்தும்.

குறிப்பிடத்தக்க அடுத்த இரண்டு நிகழ்ச்சிகளாவன: வித்யாலயத்தின் நிறுவனர்–செயலர், தீர்க்கதரிசி திரு T. S. அவிநாசிலிங்கம் அவர்களின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாகப் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட மிக உயர்வாகப் பாராட்டப்பெற்ற திருக்குறள் நூலின் இரண்டாம் பதிப்பு வெளியீடு; இரண்டாவது: தரம், புதுமை மற்றும் குறைந்த செலவிலான கட்டுமானம் இவற்றுக்காகப் பாராட்டப்படும் உள்ளரங்க விளையாட்டு மைதானத்தின் திறப்பு விழா. இதன் பெரும்பகுதி மின் இணைப்புப் பணிகள் நமது தொழிற்பயிற்சி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் செய்யப்பட்டது.

இனி வரவிருக்கும் மூன்று புதிய செயல்களாவன: மாருதி உடற்கல்விக் கல்லூரியில் 250 மாணவர்களுக்கான ஒரு விடுதி கட்டுதல், கலை அறிவியல் கல்லூரியின் சுயநிதிக் கல்விப் பிரிவுகளுக்காக ஒரு புதிய கட்டிடம் கட்டுதல், மிக முக்கியமான நிகழ்ச்சியான 2005–வித்யாலய பவளவிழாக் கொண்டாட்டம். முக்கியமான நிகழ்ச்சிகள் 3.2.2005 முதல் 6.2.2005 வரை நடைபெறும். இத்துடன் நமது நிறுவனங்கள் ஒவ்வொன்றும், நம் சமுதாயத்தின் பல்வேறு அங்கங்களைப் பற்றியுமான ஓராண்டு காலத்துக்கான கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

தாங்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு இயன்ற அளவு பொருள் உதவி அளிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

உங்கள் அன்புள்ள,

**சுவாமி ஆத்மாராமானந்தர்**

செயலர்.

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பொது நிகழ்ச்சிகள் | 2 |
| பயிலரங்கு மற்றும் பணியரங்கு | 4 |
| சர்வதேச நிகச்சிகள் | 5 |
| தேசிய மற்றும் மண்டல நிகழ்ச்சிகள் | 6 |
| முனைவர் பட்டம் | 11 |
| முகாம்கள் | 11 |
| கல்விச் சாதனைகள் | 11 |
| விளையாட்டுப் பகுதி | 12 |
| இலக்கியம், கலை மற்றும் நுண்திறன் போட்டிகள் | 12 |
| தேர்வு முடிவுகள் | 13 |
| முன்னாள் மாணவர் சங்கக் கூட்டங்கள் | 14 |
| நியமனங்கள் | 14 |
| வழியனுப்பு விழா | 15 |
| நகர மையம் | 15 |
| உள்விளையாட்டு அரங்கம் | 15 |
| பவள விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சி நிரல் | 16 |

## பொது நிகழ்ச்சிகள்

கல்பதரு நாள் வித்யாலய வளாகத்திலும், நகர மையத்திலும் 1 ஜனவரி 2004 அன்று பக்தியுடன் கொண்டாடப்பட்டது.

4 ஜனவரி 2004 அன்று குருபூஜை விழா வழக்கம்போல் கொண்டாடப் பட்டது. இதில் 20,000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

வித்யாலய தினம் 3 பிப்ரவரி 2004 அன்று கொண்டாடப்பட்டது. இந்நாளில் வித்யாலயத்தின் மிகச்சிறந்த வெளியீடான திருக்குறள் இரண்டாம் பதிப்பு முனைவர் N. மகாலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது. கோயமுத்தூர் அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் முனைவர் K. குழந்தைவேலு அவர்கள் இவ்விழாவினைத் துவக்கி வைத்தார். கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு N. முருகானந்தம் சிறப்புரையாற்றினார். 1700 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 400/– ஆகும்.




பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 169–வது பிறந்த நாள் 22 பிப்ரவரி 2004 அன்று கொண்டாடப்பட்டது. சுமார் 400 பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர். தி. அ. தி. கலாநிலையத்தில் 40 ஏழை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு, ஜூன் 2004 முதல் அனைத்துப் பள்ளி நாட்களிலும் இலவசமாகக் காலைச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது.



வித்யாலய உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு தினம், மற்றும் விடுதி நாள் விழா நிகழ்ச்சிகள் 19 மார்ச் 2004 அன்று நடைபெற்றன. சுவாமி சிவானந்தா மேல்நிலைப்பள்ளியின் ஆண்டு விழா நிகழ்ச்சி GKD கலையரங்கில் 16 பிப்ரவரி 2004 அன்று நடைபெற்றது.

கோயமுத்தூர் மண்டலப் போக்குவரத்து அலுவலகத்தால் 10 ஜனவரி 2004 அன்று நடத்தப்பட்ட 'சாலைப் பாதுகாப்பு' என்னும் கருத்தரங்கில் தொழிற்பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்களும் 50 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனத்தின் விடுதிநாள் நிகழ்ச்சி 13 பிப்ரவரி 2004 அன்று நடைபெற்றது.

திரு L. சிவசாமி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், 23 ஜனவரி 2004 அன்று பாலிடெக்னிக் கல்லூரியில் 'பட்டயப் பொறியாளர்களுக்கான வாய்ப்புகள்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

பாலிடெக்னிக் கல்லூரியின் ஆண்டு தினம் மற்றும் விடுதி நாள் விழா 13 பிப்ரவரி 2004 அன்று நடைபெற்றது. இதில் திரு V. ரங்கநாதன், CODISSIA முன்னாள் தலைவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாலிடெக்னிக் கல்லூரி, சோப்புத்தூள், பினாயில், மற்றும் சொட்டுநீலம் தயாரிப்பதற்கான ஒருநாள் பாட வகுப்பினை 13 பிப்ரவரி 2004 அன்று பாலிடெக்னிக் வளாகத்தில் நடத்தியது.

பாலிடெக்னிக் கல்லூரி, சமுதாய பாலிடெக்னிக் திட்டத்தின் மூலம், 2004 மார்ச் 24 முதல் 26 வரை நமது GKD கலையரங்கில் பயிற்சியாளர்களுக்காக Entrepreneurship Development Programme நடத்தியது.

காந்தி ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான சமஸ்கிருத வகுப்புகள் 3 பிப்ரவரி 2004 முதல் தொடங்கப்பட்டுள்ளது. சமஸ்கிருத ஆசிரியர் திரு ஜோதிஷ்குமார் இவ்வகுப்புக்களை நடத்துகிறார்.

காந்தி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் 7 மாணவர்கள், விவேகானந்த கேந்திரம் கன்னியாகுமரியில் 2004 பிப்ரவரி 6 முதல் 9 வரை நடத்திய ஆளுமை வளர்ச்சிப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டத்தின் திட்ட அலுவலர் திரு K. கந்தப்பன் பல்கலைக் கழக அளவில் 2002–03–ம் ஆண்டுக்கான சிறந்த நாட்டு நலப்பணித் திட்டத்தின் திட்ட அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நான்கு தேசிய மாணவர் படை வீரர்கள் R. கௌதமன், R. ரவிக்குமார், P. கார்த்திகேயன், M. பிரபாகரன் ஆகியோர் 28 டிசம்பர் 2003 முதல் 11 ஜனவரி 2004 வரை சென்னை பல்லாவரத்தில் நடைபெற்ற 15 நாள் Army Attachment Camp–ல் கலந்து கொண்டனர்.

உடுமலைப்பேட்டை, அமராவதி நகர் சைனிக் பள்ளியில் 2004 ஜனவரி 8 முதல் 19 வரை நடைபெற்ற 12 நாள் National Integration Camp–ல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேஜர் S. M. மோகன் மற்றும் C. ராஜ்குமார், M. கார்த்திகேயன், J. ஸ்டீபன்ராஜ், R. பிரசாந்த், M. பிரகாசம் ஆகிய ஐந்து தேசிய மாணவர் படை வீரர்களும் பங்கு பெற்றனர்.

கோயமுத்தூர் மண்டலத்தின் முன்னாள் இணை கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர் G. கோபால் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலாளராக 2 பிப்ரவரி 2004 முதல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கலை அறிவியல் கல்லூரியின் சமூகப் பணித்துறை கோயமுத்தூர் ஷீலா மருத்துவமனையின் ஒத்துழைப்புடன் 10 ஏப்ரல் 2004 அன்று பூச்சியூரில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தியது.




கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆண்டு தினம், மற்றும் விளையாட்டு விழா 26 மார்ச் 2004 அன்று நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலை அறிவியல் கல்லூரி சுழற்கோப்பை கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள், மாருதி கல்லூரி மைதானத்தில் 2004 பிப்ரவரி 28 முதல் மார்ச் 4 வரை நடைபெற்றது. இதில் 18 கல்லூரிகளின் அணிகள் பங்கு பெற்றன.

கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் S. ஜெயராமன் 31 மே 2004 முதல் பணி ஓய்வு பெற்றார். இவரது இடத்தில் முனைவர் V. குழந்தைசாமி 1 ஜூன் 2004 முதல் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுவாமி சர்வரூபானந்தர், கல்வியியல் கல்லூரி மற்றும் மாருதி உடற்கல்விக் கல்லூரி இவற்றின் செயலாளராக 10 மார்ச் 2004 முதல் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்விரு கல்லூரிகளின் செயலாளராக இருந்த சுவாமி அபிராமானந்தர் பேலூர் மடத்தின் பயிற்சி மையத்தில் ஆர்சார்யராகப் பணியாற்றுவதற்காகச் சென்றுள்ளார்.

வித்யாலயத்தின் Post-matric நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா GKD கலையரங்கில் 23 மார்ச் 2004 அன்று நடைபெற்றது. மேலும் நமது 3 கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா 25 மார்ச் 2004 அன்று நடைபெற்றது. மைசூர் ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தின் தலைவர் சுவாமி ஆத்மவிதானந்தஜி மகராஜ் அவர்கள் இவ்விழாவைத் துவக்கி வைத்தார்.

மாருதி உடற்கல்விக் கல்லூரி, கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் ஆகியவற்றை 27 மார்ச் 2004 அன்று கொண்டாடியது.

இந்தியக் கூடைப்பந்துக் கழகம் நடத்திய 'A' தகுதி நடுவர் தேர்வில் மாருதி உடற்கல்விக் கல்லூரியைச் சேர்ந்த திரு A. ஷாஜுதீன், மற்றும் N. சிவசங்கரன் ஆகிய MPEd மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

கோயமுத்தூர் நேரு விளையாட்டரங்கின், மாநகராட்சி விளையாட்டுத் திடலில் 24 பிப்ரவரி 2004 அன்று சிறுவர் விளையாட்டு விழாவுக்கு மாருதி உடற்கல்விக் கல்லூரி ஏற்பாடு செய்திருந்தது. தொடக்கப்பள்ளி, மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளைச் சேர்ந்த 1200க்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்குபெற்றனர்.

மாருதிக் கல்லூரி, தேசிய இளைஞர் தினத்தையொட்டி, ராமலிங்கம் செட்டியார் மேல்நிலைப் பள்ளியிலிருந்து நகர மையம் வரையிலான பள்ளி மாணவர் பேரணி ஒன்றை 12 ஜனவரி 2004 அன்று ஏற்பாடு செய்திருந்தது. கோயமுத்தூர் CRPF பயிற்சிக் கல்லூரியின் முதல்வர் திரு A. N. ஸ்ரீனிவாசன் பேரணியைக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.

குடியரசு தின விழா மாருதி உடற்கல்விக் கல்லூரி மைதானத்தில் 26 ஜனவரி 2004 அன்று கொண்டாடப்பட்டது. சுமார் 1700 வித்யாலய மாணவர்கள் அணிவகுப்பில் பங்கு பெற்றனர். ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் பொருளாளர் சுவாமி ஹிதகாமானந்தர் தேசியக் கொடியை ஏற்றிவைத்துக் குடியரசு தின உரையாற்றினார்.



வித்யாலய முன்னாள் மாணவரும், கோயமுத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறைத் தலைவருமான திரு S. K. நாராயணதாஸ், மற்றும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் Crystallography and Bio-physics துறையின் பேராசிரியர் திரு M. N. பொன்னுசாமி ஆகியோர், 2003–ஆம் ஆண்டுக்கு, இயற்பியல் அறிவியலுக்கான தமிழ்நாடு அறிவியலறிஞர் பரிசு (TANSA) பெற்றனர். இப்பரிசுகள், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தால் நிறுவப்பட்டது. இப்பரிசு ரூ. 10,000/– ரொக்கப்பரிசும் ஒரு பாராட்டுப் பத்திரமும் கொண்டது.

கல்வியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவும், கல்லூரிநாள் விழாவும் 25 மார்ச் 2004 அன்று நடைபெற்றது.

சர்வ சிக்ஷ அபியான் (SSA-IED) திட்டத்தின்கீழ், கோவை மாவட்டத்திலுள்ள 22 வட்டாரங்களிலும் வட்டார வள மையங்கள் ஆரம்பித்ததன் மூலம் கோயமுத்தூர் மாவட்டம் மேலும் ஒரு சாதனையைப் புரிந்துள்ளது. இம்மையங்கள் அனைத்தையும் துவக்கி வைத்ததற்கு அடையாளமாக, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு N. முருகானந்தம் 26 ஜனவரி 2004 அன்று அன்னூர் மையத்தைத் துவக்கி வைத்தார். சர்வதேச மனிதவள

மேம்பாட்டு மையத்தின் செயலாளர் சுவாமி அபிராமானந்தர் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறைச் செயலர் திருமதி. சாந்தாஷீலாநாயர், கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு N. முருகானந்தம், ஆகியோர் மாவட்ட நிர்வாக அலுவலர்களுடன் 30 ஜனவரி 2004 அன்று சர்வதேச மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தைப் பார்வையிட்டு, சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து சர்வதேச மனிதவள மேம்பாட்டு மைய இயக்குநருடன் ஆலோசனை நடத்தினர்.



மத்தியப் பிரதேச போஜ் திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தின் BEd சிறப்புக் கல்வி மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட நேரடித் தொடர் வகுப்புகள் 2004 பிப்ரவரி 5 முதல் 25 வரை சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடத்தப்பட்டது.

சின்னமத்தம்பாளையம், பெட்டதாபுரம், மற்றும் செல்வபுரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகளில் 2004 மார்ச் 4, 11 மற்றும் 18 தேதிகளில் சர்வதேச மனிதவள மேம்பாட்டு மைய அலுவலர்களால் திறன் குறைபாடுள்ள சிறுவர்களைக் கண்டறிவதற்காக ஒரு பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகளது கூட்டம் சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தில் 13 மார்ச் 2004 அன்று நடத்தப்பட்டது. 20 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த குறைதிறன் கொண்ட 40 பேர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தின் சைகை மொழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் C. S. I. செவிடர் பள்ளியில் 12 மார்ச் 2004 அன்று சைகை மொழி தொடர்பான ஒரு ஒத்திசைவுப் பயிற்சியை நடத்தியது. இதில் 34 பேர் கலந்து கொண்டனர்.

சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தைச் சேர்ந்த 34 பயிற்சியாளர்களும் 10 அலுவலர்களும் 2004 மார்ச் 23 முதல் 27 வரை திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், பாளையங்கோட்டை, கன்னியாகுமரி, கொச்சி ஆகிய இடங்களுக்குக் கல்விப் பயணம் சென்றனர்.

இந்திய அரசின் ஊரக மேம்பாட்டுச் செயலாளர் திரு C. V. சங்கர், I.A.S, அவர்கள் 7 மே 2004 அன்று ஊனமுற்றோர் சுய உதவிக்குழு தொகுப்பு மையத்தைப் பார்வையிட்டார். கோயமுத்தூர் மாவட்டத்தில் சுய உதவிக் குழுத் திட்டங்கள் செயல்படுத்தப் படுவதைப் பரிசீலிப்பதே இவ்வருகையின் நோக்கமாகும்.



25 மே 2004 அன்று சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தின் செயலாளராக சுவாமி விஷ்வேஷானந்தர் அவர்கள் சுவாமி சர்வரூபானந்தர் அவர்களுக்குப் பதிலாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் முனைவர் M. N. G. மணி, தேசிய ஆசிரியர் குழு மற்றும் இந்திய மறுவாழ்வுக் கழகம் இவற்றிடையே கருத்திணக்கத்தை மேம்படுத்துவதற்காக NCTE மற்றும் RCI–ஆகியவற்றால் அவற்றின் துணைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர், ஊனமுற்றோர் மேற்கல்விக்கான நெறிமுறைகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை ஆய்வதற்கான குழுவின் அமைப்பாளராகப் பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பயிலரங்குகள் மற்றும் பணியரங்குகள்

'Ways to Become Successful Entrepreneur' என்னும் தலைப்பில் ஒரு பயிலரங்கம் பாலிடெக்னிக் கல்லூரியின் EMD துறையால் 28 ஜனவரி 2004 அன்று நடத்தப்பட்டது.

'Career Guidance in Software Field' என்னும் தலைப்பிலான ஒரு பயிலரங்கம் 11 பிப்ரவரி 2004 அன்று பாலிடெக்னிக் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டது.



‘Individual Potential Development’ என்ற தலைப்பில் ஒரு பயிலரங்கம் பாலிடெக்னிக் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு EEE மற்றும் இரண்டாம் ஆண்டு DCRE மாணவர்களால் 25 பிப்ரவரி 2004 அன்று நடத்தப்பட்டது.

மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்களுக்காக ‘Minor Games’ என்ற தலைப்பிலான ஒருநாள் பயிலரங்கம் மாருதி உடற்கல்விக் கல்லூரியால் 20 மார்ச் 2004 அன்று நடத்தப்பட்டது.

‘Trends Emerging in Physical Education in the 21st Century’ என்னும் தலைப்பில் தேசிய அளவிலான ஒரு பயிலரங்கம் 2004 ஜனவரி 29 மற்றும் 30–ம் தேதிகளில் மாருதி உடற்கல்வியியல் கல்லூரியால் நடத்தப்பட்டது. நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் உடற்கல்வியியல் துறையில் புகழ்பெற்ற 132 பேர் இதில் கலந்து கொண்டனர்.

‘Quality Research in Teacher Education’ என்ற தலைப்பில் தேசிய அளவிலான பயிலரங்கம் ஒன்று 2004 மார்ச் 19 முதல் 21 வரை கல்வியியல் கல்லூரியால் நடத்தப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 66 பிரதிநிதிகள் இதில் பங்குபெற்றனர்.




சிறார் பருவக் குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறிந்து தரப்படுத்துவதற்காகத் துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒரு பணியரங்கம் 2004 ஜனவரி 29 மற்றும் 30 அன்று சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தால் நடத்தப்பட்டது. துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் 25 பேர் இப்பணியரங்கில் கலந்து கொண்டனர்.

மனநலம் குன்றியவர்களின் பெற்றோருக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்கான செயல்திட்ட வகுப்பு சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தால் 18 பிப்ரவரி 2004 அன்று நடத்தப்பட்டது. இதில் 25 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

சைகை மொழிப் பணியரங்கம் ஒன்று வங்கிச் சொற்களுக்கான அகராதி மற்றும் சைகை மொழியினை மேம்படுத்துவதற்காக சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தால் நடத்தப்பட்டது. இதில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 10 வங்கி அலுவலர்கள் பங்கு பெற்றனர். இதே நோக்கத்துக்காக இதுபோன்ற ஒரு பணியரங்கம், சென்னையிலுள்ள செவிடர் மற்றும் மனநலம் குன்றியோருக்கான கிளார்க் பள்ளியில் 2004 மார்ச் 17 முதல் 21 வரை சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தால் நடத்தப்பட்டது.

‘Current Trends in Teaching Braille’ என்ற தலைப்பில் ஒரு பணியரங்கம் 2004 மார்ச் 22 முதல் 26 வரை சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடத்தப்பட்டது. இதில் 25 சிறப்புக் கற்பிப்பாளர்கள் பங்கு பெற்றனர்.

## சர்வதேச நிகழ்ச்சிகள்

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையம் | முனைவர் M. N. G. மணி | ஹாங்காங்–ல் ICEVI–கூட்டத்தில் கலந்து கொண்டார் | 13–16 ஜனவரி |
| | | மலேசியாவில் IEEVI–ன் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார் | 5–8 பிப்ரவரி |
| | | சிறப்புக் கல்வி பற்றி, அரசு மற்றும் பல்கலைக் கழக அலுவலர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக வியட்னாம் சென்றார் | 9–11 பிப்ரவரி |
| | | கொரியா–சியோலில் சர்வதேச அரிமா சங்கங்களின் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ‘Sight first’ என்ற சர்வதேசச் சொல்லரங்கில் உரையாற்றினார் | 27–28 மார்ச் |
| | | ‘Teaching Mathematics to Children with Visual Impairment’ என்ற தலைப்பிலான ஒரு பணியரங்கை, தென்கிழக்கு ஆசிய மண்டலத்திலுள்ள பார்வைக் குறைபாடுள்ள சிறுவர்களுக்கான ஆசிரியர்களுக்கு, தாய்லாந்து, பாங்காக் நகரில் நடத்தினார் | 22 ஏப்ரல் – 7 மே |

சர்வதேச மனிதவள மேம்பாட்டு நிறுவனம் தனது சேவையை பிறநாடுகளின் நிறுவனங்களுக்கும் விரிவாக்கியுள்ளது. இந்தோனேஷியாவைச் சேர்ந்த 14 பேரும், வியட்நாமைச் சேர்ந்த 4 பேரும், மாலத்தீவைச் சேர்ந்த 4 பேரும், எதியோப்பியாவைச் சேர்ந்த 2 பேரும் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 2 பேரும், சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்துள்ள பல்வேறு பயிற்சித் திட்டங்களில் தங்கள் பெயர்களை முன்பே பதிவு செய்து கெண்டுள்ளனர்.

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையம் | முனைவர் M. N. G. மணி | பார்வையற்ற சிறுவர்களின் கல்வி வாய்ப்புகளை அதிகப் படுத்துவதற்கான செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தினார். | 2–4 மே |
| | | தென் ஆப்பிரிக்காவின் மிட்ரான்டில் தென்ஆப்பிரிக்க அவையில் உரையாற்றினார் | 23–27 மே |
| | | தாய்லாந்தின் பாங்காக்கில் தெற்கு ஆசிய ICEVI கூட்டத்தில் கலந்து கொண்டார் | 16–17 ஜுன் |
| | திரு G. R. ரமேஷ் | தாய்லாந்து பாங்காக்கில், தென்கிழக்கு ஆசிய மண்டலத்திலுள்ள பார்வைக் குறைபாடுள்ள சிறுவர்களுக்கான ஆசிரியர்களுக்கு 'Teaching Mathematics to Children with Visual Impairment' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பணியரங்கில் மையக் கருத்தாளராகப் பணியாற்றினார் | 22 ஏப்ரல் – 7 மே |

## தேசிய மற்றும் மண்டல நிகழ்ச்சிகள்

வித்யாலய ஆசிரியர்கள் பல்வேறு தேசிய மற்றும் மாநில நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கு கொண்டனர். அவற்றின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| தொழிற்பயிற்சி நிறுவனம் | திரு G. முரளி, முதல்வர் | 'Vocational Education and Training' என்ற தலைப்பில், சென்னையிலுள்ள, தேசிய தொழிற்கல்வி ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த மண்டல அளவிலான விழிப்புணர்வுப் பணியரங்கில் கலந்து கொண்டார் | 26–27 மார்ச் |
| | திரு G. முரளி மற்றும் திரு C. சிவராமகிருஷ்ணன் | சென்னை, தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான பயிற்சி நிறுவனத்தில் நடந்த 'Vocational Training Facilities for School Dropouts at Various Level' என்ற பணியரங்கில் பங்கு பெற்றனர் | 27–28 மார்ச் |
| பாலிடெக்னிக் கல்லூரி | திரு S. செந்தில்குமார் விரிவுரையாளர் | தஞ்சாவூர், சண்முகா கலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக் கழகம் (SASTRA) 'Total Survey Station' என்ற தலைப்பில் நடத்திய களப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார் | 27–31 ஜனவரி |
| | திரு S. செந்தில்குமார் & திரு N. பாலசுப்ரமணி | கோயமுத்தூர் குமரகுரு பொறியியல் கல்லூரியில் 'Design of Earthquake Resistance Structures' என்ற தலைப்பிலான பணியரங்கில் கலந்து கொண்டனர் | 16–17 ஏப்ரல் |
| | திரு S. செந்தில்குமார் திரு N. பாலசுப்ரமணி & திரு K. பெருமாள் | பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்ட 'Proposed Revision of I.S.800' என்ற தலைப்பிலான பயிலரங்கில் கலந்து கொண்டனர் | 22–23 ஏப்ரல் |
| | திரு C. ஈஸ்வரமூர்த்தி திட்ட அலுவலர் | சிவகாசி, அரசன் கணேசன் பாலிடெக்னிக்கில் நடந்த தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் சமுதாய பாலிடெக்னிக்கு களின் வருடாந்திர ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டார் | 28–29 மே |
| கலை மற்றும் அறிவியல் கல்லூரி | முனைவர் S. ஜெயராமன் முதல்வர் | சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'Vocationalisation of Higher Education' என்ற தலைப்பிலான பயிலரங்கில் கலந்து கொண்டார் | 11 பிப்ரவரி |

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| | | கோயமுத்தூர் காருண்யா தொழில்நுட்ப நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த 'Emerging Trends in Science and Technology' ESTAT 2004 என்ற தேசிய அளவிலான பயிலரங்கில் 'Non Conventional Energy' என்ற தலைப்பில் சொற்பொழிவுவாற்றினார் | 30–31 ஜனவரி |
| | முனைவர் S. ஜெயராமன்<br>முனைவர் V. குழந்தைசாமி<br>துறைத்தலைவர்<br>கூட்டுறவுத் துறை<br>முனைவர் J. பரஞ்சோதி ராமலிங்கம், துறைத்தலைவர்<br>சமூகப்பணித்துறை<br>திரு R. ஸ்ரீதர்<br>MCA துறைத்தலைவர் | சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'Career Oriented Programme, during a UGC Interface meeting'-ல் கலந்து கொண்டனர் | 14 பிப்ரவரி |
| | முனைவர் V. சின்னுசாமி<br>வேதியியல் துறை | சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற 'வேதியியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி' என்னும் தலைப்பில், சர்வதேச அளவிலான சொல்லரங்கில் கட்டுரை சமர்ப்பித்தார் | 4–7 ஜனவரி |
| | திரு A. V. ரமணி<br>கணினி அறிவியல் துறைத்தலைவர் | மேட்டுப்பாளையம் வி.என்.கே. மகளிர் கல்லூரியில் 'Concurrent Engineering' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார் | 9 ஜனவரி |
| | திரு X. லூர்து சேவியர் வில்சன், கூட்டுறவுத்துறை | குன்னூர், பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் 'Emerging Trends in Banking and Finance' என்ற தலைப்பில் தேசிய அளவிலான பயிலரங்கில் கட்டுரை சமர்ப்பித்தார் | 13 ஜனவரி |
| | திரு M. முத்துக்குமார்<br>ஆங்கில மொழித்துறை | அண்ணா பல்கலைக் கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான தமிழ் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த 'The Need of Thirukkural to the Modern World' என்ற தலைப்பிலான சர்வதேச மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார் | 15–18 ஜனவரி |
| | | அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த பல்கலைக்கழக மானியக்குழுவின் 'Female Voices in Poetry (since 1970)' என்ற தலைப்பிலான தேசியப் பயிலரங்கில் கட்டுரை சமர்ப்பித்தார் | 22 ஜனவரி |
| | திரு A. முத்துசாமி<br>வேதியியல் துறை | கொச்சி அறிவியல் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், கொச்சி ஏற்பாடு செய்திருந்த, 'Advances in Polymer Technology APT 04' என்ற தலைப்பிலான ஒரு சர்வதேசப் பயிலரங்கில் ஆய்வுக் கட்டுரை வாசித்தார் | 16–17 ஜனவரி |
| | திரு R. சந்திரசேகர்<br>ஆங்கில மொழித்துறை | சென்னை மாநில ஆங்கில நிறுவனத்தால் நடத்தப்பட்ட 'Teaching Translation Studies' என்ற தலைப்பிலான பயிலரங்கில் பங்கு பெற்றார் | 4–6 பிப்ரவரி |
| | | சென்னையில் நடைபெற்ற இந்திய ஆங்கிலமொழி ஆசிரியர்கள் கழகத்தின் 35 ஆவது வருடாந்திர மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார் | 6–7 பிப்ரவரி |
| | திரு M. முத்துக்குமார்<br>திரு V. நீலகண்டன்<br>ஆங்கில மொழித்துறை | மேற்கண்ட மாநாட்டில் கட்டுரைகள் சமர்ப்பித்தனர் | 6–7 பிப்ரவரி |
| | திரு N. G. பாலவெங்கடேஷ்<br>கூட்டுறவுத்துறை விரிவுரையாளர் | திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரி, திருப்பூர் ஏற்பாடு செய்திருந்த 'Macro Policy Perspectives of Co-operative Sector' என்ற தலைப்பிலான தேசிய அளவிலான சொல்லரங்கில் பங்கு பெற்றார் | 12 பிப்ரவரி |

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| | முனைவர் J. பரஞ்சோதி ராமலிங்கம், துறைத்தலைவர் கூட்டுறவுத்துறை | கோயமுத்தூர் C.S.I. பிஷப் அப்பாசாமி கல்லூரியில் 'Performance Indicators for Development Intervention Programme' என்ற தலைப்பில் நடைபெற்ற மாநில அளவிலான பணியரங்கில் ஒரு அமர்வுக்கு நடுவராகப் (Moderator) பணியாற்றினார் | 17 பிப்ரவரி |
| | திரு S. சுரேஷ்பாபு திட்ட அலுவலர் நாட்டு நலப்பணித் திட்டம் | பாரதியார் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட 'Health for All' என்ற பயிலரங்கில் கலந்து கொண்டார் | 29–30 ஜனவரி |
| | திரு P. N. கதிர்வேல் வணிகவியல்துறை | கோயமுத்தூர் இந்துஸ்தான் கல்லூரியால் 21 பிப்ரவரி 2004 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட 'Impact of Globalization of Indian Industry' என்ற தலைப்பிலான பயிலரங்கில் ஆய்வுக் கட்டுரை அளித்தார் | 21 பிப்ரவரி |
| | | கோயமுத்தூர் C.M.S. அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி ஏற்பாடு செய்த 'Role of MNC's in Financial Sector' என்ற தலைப்பிலான தேசிய பயிலரங்கில் கலந்து கொண்டார் | 13 மார்ச் |
| | | கற்பகம் கலை அறிவியல் கல்லூரி ஏற்பாடு செய்த 'Significance of the Securitization in NPA Management' என்ற தலைப்பில் மாநில அளவிலான பயிலரங்கில் கட்டுரை சமர்ப்பித்தார் | 20 மார்ச் |
| | திரு J. ரவிச்சந்திரன் வேதியியல் துறை | கோயமுத்தூர் அரசு கலைக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட 'Recent Trends in Electro Chemistry' என்ற தலைப்பிலான பயிலரங்கில் கலந்து கொண்டார் | 3 மார்ச் |
| | முனைவர் V. குழந்தைசாமி திரு P. முருகேசன் கூட்டுறவுத்துறை | கோலாப்பூர் சிவாஜி பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த 'Re-asserting the Co-operative Movement' என்ற பொருளிலான தேசியப் பயிலரங்கில் கருத்தாளராகப் பணியாற்றினார் | 25–26 மார்ச் |
| | முனைவர் V. குழந்தைசாமி மற்றும் முனைவர் J. பரஞ்சோதி ராமலிங்கம் | P.S.G. கலை அறிவியல் கல்லூரியில் 'Progressive Initiatives of Autonomous Colleges towards Excellence in Global Education' என்ற தலைப்பிலான தேசியப் பணியரங்கில் கலந்து கொண்டனர் | 18–20 மார்ச் |
| | திரு R. ஸ்ரீதர் எம்.சி.ஏ. துறைத்தலைவர் | கோயமுத்தூர் பாரதிய வித்யா பவனில் நடந்த 'Education-key to the Nation Building' என்ற தலைப்பிலான பயிலரங்கில் பங்கு பெற்றார் | 27 மார்ச் |
| | | சென்னை D.B. ஜெயின் கல்லூரியில் நடைபெற்ற 'Futuristic Perspectives of Colleges of Arts and Science in the Global Scenario' என்ற தலைப்பில் மாநில அளவிலான பயிலரங்கில் கலந்து கொண்டார் | 30–31 மார்ச் |
| | திரு C. ஜெயபாலகிருஷ்ணன் வேதியியல் துறை | கொச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் பயன்பாட்டு வேதியியல் துறை நடத்திய 'Current Trends in Chemistry' என்ற தலைப்பில் தேசியச் சொல்லரங்கில் கட்டுரை சமர்ப்பித்தார் | 15–17 மார்ச் |
| | முனைவர் C. விசுவநாதன் தமிழ்மொழித்துறை | கோயமுத்தூர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நடத்திய 'The Art of Questioning' என்ற பணியரங்கில் கலந்து கொண்டார் | 30 மார்ச் |
| | முனைவர் C. தணிகாசலம் கூட்டுறவுத்துறை | கோவை அமிர்த விஸ்வ வித்யா பீடத்தில் (நிகர் நிலைப் பல்கலைக்கழகம்) நடைபெற்ற 'Cultural Education in 21st | 8 மே |

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| | திரு M. முத்துக்குமார்<br>ஆங்கில மொழித்துறை | Century India' என்ற தலைப்பில் அமைந்த தேசிய சொல்லரங்கில் பங்கு பெற்றனர் | |
| மாருதி உடற்கல்விக் கல்லூரி | முனைவர் G. பழனிசாமி | கோயமுத்தூர் சபர்பன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வருடாந்திர விளையாட்டு நாள் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார் | 13 ஜனவரி |
| | | R.V.S. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வருடாந்திர விளையாட்டு நாள் விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கு கொண்டார் | 14 ஜனவரி |
| | | கோயமுத்தூர் மாவட்டக் கூடைப்பந்துக் கழகம் P.S.G. தொழில்நுட்பக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த மாநில அளவிலான கூடைப் பந்து நடுவர்கள் விவாத அரங்கில் (Clinic) கலந்து கொண்டார் | 8 பிப்ரவரி |
| | | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உடற்கல்வி மற்றும் விளையாட்டு அறிவியல் துறையால் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசியப் பயிலரங்கில் 'Construction and Standardization of Skill test for Male Basketball Players' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை சமர்ப்பித்தார் | 5 மார்ச் |
| | முனைவர் G. பழனிசாமி<br>முனைவர் V. பெருமாள்<br>முனைவர் V.S.D. சாய்குமார்<br>முனைவர் S. அழகேசன்<br>முனைவர் S. D. N. ராஜேஸ்வரன் | கோயமுத்தூர் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் படிப்பு மையத்தால் நடத்தப்பட்ட தொலைக்கல்வித் திட்ட வகுப்பில் கருத்தாளர்களாகப் பணியாற்றினர் | 17–22 பிப்ரவரி |
| | முனைவர்<br>S. D. N. ராஜேஸ்வரன்<br>விரிவுரையாளர் | பீகார் ராஞ்சியில் நடைபெற்ற அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளுக்குச் சென்ற பாரதியார் பல்கலைக் கழக விளையாட்டு வீரர் குழுவுக்குப் பயிற்சியாளராகவும், குழு மேலாளராகவும் உடன் சென்றார் | 22 ஜனவரி – 3 பிப்ரவரி |
| | திரு D. ஜெயபால்<br>விரிவுரையாளர் | பாரதியார் பல்கலைக் கழகத்தின் கல்வித் திட்டக் கல்லூரியால் நடத்தப்பட்ட புத்தாக்கப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார் | 1–22 மார்ச் |
| கல்வியியல் கல்லூரி | முனைவர் N. முத்தையா<br>முதல்வர் மற்றும் முனைவர் S. சுதர்சன்<br>வரலாற்றுத்துறைப் பேராசிரியர் | கோயமுத்தூர் அரசினர் மகளிர் கல்வியியல் கல்லூரியில் BEd செய்முறைத் தேர்வுகளுக்குப் புறநிலைத் தேர்வாளர்களாகப் பணியாற்றினர். | 17–18 பிப்ரவரி |
| | முனைவர் N. முத்தையா | பாளையங்கோட்டை புனித சேவியர் கல்வியியல் கல்லூரியில் 'Education of the Disabled' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார் | 24 பிப்ரவரி |
| சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையம் | முனைவர் M. N. G. மணி | புதுடெல்லியில் ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NHFDC)–ன் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார் | 16 பிப்ரவரி |
| | | புதுடெல்லியில் 'Role or Media in Creating Awareness on Disability' என்பது பற்றிய கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கு பெற்றார் | 8–9 மார்ச் |
| | | புதுடெல்லியில் RCI–ன் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார் | 29 மார்ச் |

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| | | புதுடெல்லி இந்திய மறுவாழ்வுக் கழகத்தில் நடைபெற்ற இந்திய மறுவாழ்வுக் கழக இதழ் வெளியீடு தொடர்பான முதலாவது ஆசிரியர்குழுக் கூட்டத்தில் பங்கு பெற்றார் | 1 ஏப்ரல் |
| | | NCTE–ன் தென்மண்டலக் குழுக் கூட்டம், மற்றும் இந்திய மறுவாழ்வுக் கழகத்தின் நிபுணர்குழு, மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டார் | |
| | முனைவர் M. N. G. மணி<br>திரு V. கோபாலகிருஷ்ணன்<br>திரு V. R. மதிவாணன் | புதுடெல்லி RCI–ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட மறுவாழ்வுச் சங்கங்களின் கூட்டத்தில் கலந்து கொண்டனர் | 23–24 பிப்ரவரி |
| | முனைவர் M. N. G. மணி<br>திரு V. R. மதிவாணன் | சென்னை சர்வ சிக்ஷ அபியான் இயக்குநரகத்தில் நடைபெற்ற SSA மதிப்பீட்டுத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் கூட்டத்தில் பங்குபெற்றனர் | 16–17 மார்ச் |
| | திரு V. R. மதிவாணன் | செகந்திராபாத்திலுள்ள தேசிய மனநலம் குறைந்தோர் நிறுவனத்தைப் (NIMH) பார்வையிட்டு, அந்நிறுவனம் சென்னையில் துவக்கத் திட்டமிட்டுள்ள மையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார் | 26 ஏப்ரல் |
| | முனைவர் M. மணிவண்ணன் | புதுடெல்லி RCI மற்றும் ICEVI–ஏற்பாடு செய்த 'Development of a Handbook on Low Vision' என்ற தலைப்பிலான 3 நாள் பணியரங்கில் கலந்து கொண்டார் | 6–8 ஜனவரி |
| | முனைவர் M. மணிவண்ணன்<br>திரு S. பார்த்தசாரதி | ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கல்வியியல் கல்லூரி ஏற்பாடு செய்த 'Quality Research in Teacher Education' என்ற தலைப்பிலான பயிலரங்கில் கலந்து கொண்டனர் | 19–21 மார்ச் |
| | திரு M. மசூப் பாட்சா | கோயமுத்தூர்–கோவை மருத்துவ மைய மருத்துவமனை ஏற்பாடு செய்த 'Spinalcord Injury Rehabilitation' என்ற தலைப்பிலான ஒரு பணியரங்கில் கலந்து கொண்டார் | 6 மார்ச் |
| | திரு A. கமல் குமார் | புவனேஸ்வரில் 'Orthotics and Prosthetics Society of India, OPSI–2004'–ன் பதினாறாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டார் | 23–25 ஜனவரி |
| | திரு M. மசூப் பாட்சா<br>திரு A. கமல் குமார் | ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்காக பொங்கலூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'Orientation Programme on Locomotor Disability'–ல் கருத்தாளர்களாகப் பணியாற்றினர் | 16 பிப்ரவரி |
| | திரு V. R. மதிவாணன்<br>முனைவர் M. மணிவண்ணன்<br>திரு G. R. ரமேஷ் மற்றும்<br>திரு G. அமரேஷ் | அந்தமான், நிகோபார் நிர்வாகத்தின் சமூக நலத்துறை போர்ட் பிளெய்ரில் நடத்திய 'Orientation for Teachers and Community Based Rehabilitation Workers'–ல் கருத்தாளர்களாகப் பணியாற்றினர் | 17–22 மே |
| | திரு S. பாபு<br>திரு M. சுப்பிரமணியன் | பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தின் (IIS) அறிவியலாளர்கள் தயாரித்துள்ள புதிய தமிழ் மென்பொருள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, அந்நிறுவனத்தைப் பார்வையிட்டனர். இம்மென்பொருளால் தமிழில் அச்சிடப்பட்ட செய்திகளைப் பத்திரங்களாக மாற்ற முடியும். அத்துடன் தமிழிலுள்ள செய்திகளைப் பத்திர வடிவங்களாகக் கணினியில் மாற்ற முடியும் | 19 ஏப்ரல் |

| நிறுவனம் | அலுவலர் | செயல்பாடுகள் | தேதி |
|---|---|---|---|
| | திரு G. அமரேஷ் | கர்நாடகாவின், ஊனமுற்றோருக்கான முதன்மை ஆணையாளரால் ஏற்பாடு செய்யப்பட்ட 'Issues of the Hearing Impaired Children in Karnataka' என்ற பணியரங்கில் பங்கேற்றார் | 28–30 ஏப்ரல் |
| | | மும்பையிலுள்ள, அலி யாவர் ஜங் செவித்திறன் குறைபாடுள்ளோருக்கான தேசிய நிறுவனம் (AYJNIHH) ஏற்பாடு செய்திருந்த சைகை மொழிப் பட்டயக் கல்வி அளிக்கும் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான தேவைகள் பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டத்தில் கலந்து கொண்டார் | 8 ஜூன் |

## முனைவர் பட்டம் பெறுதல்

கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த திரு A. முருகவேல், 4 பிப்ரவரி 2004 அன்று பாரதியார் பல்கலைக்கழகத்தால் முனைவர் பட்டம் வழங்கப்பெற்றார்.

'Sensitization of the Institutes on Implementation of the RCI recognized courses through Credit Accumulation System' என்னும் தலைப்பிலான ஒரு பணியரங்கம் 2004 ஏப்ரல் 1 முதல் 3 வரை சர்வதேச மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மற்றும் கேரளத்திலிருந்து, RCI-ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் 25 பிரதிநிதிகள் இதில் பங்கு பெற்றனர்.

### முகாம்கள்

பாலிடெக்னிக் கல்லூரியின் சமுதாய பாலிடெக்னிக் திட்டத்தினர், எண். 4, வீரபாண்டி கிராமத்தில், அறிவொளி நகரில் 11 பிப்ரவரி 2004 அன்று 'Hygienic and Health' என்ற ஒரு முகாமை நடத்தினர்.

கல்வியியல் கல்லூரியின் BEd மாணவர்களுக்கான வருடாந்திர சாரணர் முகாம் 2004 ஜனவரி 19 முதல் 28 வரை நடைபெற்றது.

தசை இயக்கக் குறைபாடுள்ள சிறுவர்களுக்கு Calipers மற்றும் உதவி உபகரணங்கள் வழங்குவதற்கு அளவு எடுக்கும் முகாம், சர்வதேச மனிதவள மேம்பாட்டு மைய அலுவலர்களால், பொள்ளாச்சி, திருப்பூர், மற்றும் கோயமுத்தூர் ஆகிய இடங்களில் முறையே 18, 19 மற்றும் 20 மார்ச் 2004–ல் நடத்தப்பட்டது. 150 பேருக்கு Calipers மற்றும் Crutches–க்கு அளவெடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இம்மையம் உதவி உபகரணங்களைத் தயாரித்துள்ளது.

### கல்விச் சாதனைகள்



மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பாலிடெக்னிக் கல்லூரியில் 22 ஜனவரி 2004 அன்று மாநில அளவிலான ISTE பயிலரங்கில் பாலிடெக்னிக் கல்லூரியின் மூன்றாமாண்டு மின்னியல் மற்றும் மின்னணுவியல் பட்டயக் கல்வி மாணவர்கள் திரு G.சுந்தர் மற்றும் திரு A. அருண்குமார் ஆகியோர் 'Renewable Energy Sources' என்னும் தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்து முதல் பரிசு பெற்றனர்.

திரு P. செல்வக்குமார், கலை அறிவியல் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு MSc இயற்பியல்துறை மாணவர், கோயமுத்தூர் காருண்யா தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற 'Emerging Trends in Science and Technology - ETSAT - 2004' என்ற தேசிய அளவிலான பயிலரங்கில் கட்டுரை சமர்ப்பித்தார். திரு பொன் சத்தியமூர்த்தி, இரண்டாம் ஆண்டு MSc இயற்பியல்தறை மாணவரும், இப்பயிலரங்கில் 'Black Nickal Selective Surfaces for Photothermal Conversion of Solar Energy' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை சமர்ப்பித்தார். இவ்விருவரும் முறையே தங்களது ஆய்வுக் கட்டுரைகளுக்காக சிறந்த ஆய்வறிக்கைப் பரிசினைப் பெற்றனர்.



திரு M. முத்துக்குமார், கலை அறிவியல் கல்லூரியின் இரண்டாமாண்டு BSc வேதியியல் மாணவர், புது டெல்லியில் நடைபெற்ற குடியரசுதின அணிவகுப்பில் பங்குபெற்றதற்காக, 19 பிப்ரவரி 2004 அன்று கேடயமும் சான்றிதழும் பெற்றார்.

கலை அறிவியல் கல்லூரியின் மூன்றாமாண்டு BSc மின்னணுவியல் துறை மாணவர்கள் திரு A. சரவணன் மற்றும் திரு N. பிரசன்னா ஆகியோர் கோயமுத்தூர் கற்பகம் கலை அறிவியல் கல்லூரியில் 27 பிப்ரவரி 2004 அன்று ஏற்பாடு செய்யப்பட்ட கல்லூரிகளுக்கிடையிலான 'E-Designing' போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றனர்.



கலை அறிவியல் கல்லூரியின் முதலாண்டு முதுநிலை சமூகப் பணித்துறை மாணவர் திரு M. காமராஜ், 28 பிப்ரவரி 2004 அன்று C.S.I. பிஷப் அப்பாசாமி கல்லூரியால் உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்பட்ட இசைக்கருவிகள் இசைக்கும் போட்டியில் முதல் பரிசு பெற்றார்.

கலை அறிவியல் கல்லூரியின் MPhil இயற்பியல் துறை மாணவர் திரு M. A. ஸ்ரீபாலகுமார், 2003–2004–ம் ஆண்டுக்கான Belur Math Human Excellence Award பெற்றார்.

கலை அறிவியல் கல்லூரியின் MPhil இயற்பியல் துறை மாணவர் திரு R. பிரகாசம், கன்னியாகுமாரி விவேகானந்த கேந்திரம் 2004 மார்ச் 6 முதல் 9 வரை ஏற்பாடு செய்திருந்த 'எழுமின் விழிமின்' என்ற மாநில அளவிலான போட்டியில் முதல் பரிசு பெற்றார்.

கலை அறிவியல் கல்லூரியின் முதலாண்டு MSc இயற்பியல் மாணவர் திரு S. சிவகுமார் மற்றும் முதலாண்டு BSc மாணவர்கள், திரு P. கண்ணன், திரு C. பாஸ்கர் ஆகியோர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் பிப்ரவரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, மாநில அளவிலான கல்லூரிகளுக் கிடையிலான போட்டி 'Tachyon's 04'–ல் தமிழ் கட்டுரைப் படைப்பு, மற்றும் வினாடி வினாப் போட்டிகளில் முறையே முதற் பரிசுகளைப் பெற்றனர்.

மாருதி கல்லூரியின் MPhil மாணவர் திரு S. கிஷோர்குமார், MPEd பட்டப் படிப்பில் மிகச்சிறந்த கல்விச் சாதனைக்கான தங்கப் பதக்கத்தை, பாரதியார் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு ஆளுநரிடமிருந்து 5 மார்ச் 2004 அன்று பெற்றார்.

கல்வியியல் கல்லூரியைச் சேர்ந்த BEd மாணவர் திரு P. ஆனந்தசேகர், காமராஜ் நினைவு உயர்தகுதி உதவித் தொகை ரூபாய் 3000/– பாரதியார் பல்கலைக்கழகத்திலிருந்து 2003–2004–ஆம் ஆண்டுக்குப் பெற்றார்.

## விளையாட்டுப் பகுதி

2003–04–ஆம் ஆண்டுக்கான அகில வித்யாலய, நிறுவனங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 21 டிசம்பர் 2003 முதல் மாருதி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

| வ. எண் | போட்டி | தகுதி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | கையுந்து பந்து | வின்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| | | ரன்னர் | பாலிடெக்னிக் கல்லூரி |
| 2 | கோ–கோ | வின்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| | | ரன்னர் | காந்தி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |
| 3 | கபடி | வின்னர் | பாலிடெக்னிக் கல்லூரி |
| | | ரன்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| 4 | கால்பந்து | வின்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| | | ரன்னர் | காந்தி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |
| 5 | டேபிள் டென்னிஸ் | வின்னர் | பாலிடெக்னிக் கல்லூரி |
| | | ரன்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| 6 | பால் பாட்மின்டன் | வின்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| | | ரன்னர் | தொழிற்பயிற்சி நிறுவனம் |
| 7 | ஷட்டில் பாட்மின்டன் | வின்னர் | பாலிடெக்னிக் கல்லூரி |
| | | ரன்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| 8 | கூடைப்பந்து | வின்னர் | கலை அறிவியல் கல்லூரி |
| | | ரன்னர் | தொழிற்பயிற்சி நிறுவனம் |
| 9 | செஸ் (ஆசிரியர்கள்) | முதலிடம் | திரு C.S. ராஜ்குமார், பாலிடெக்னிக் கல்லூரி |
| | | இரண்டாமிடம் | திரு M. ராமகிருஷ்ணன் கல்வியியல் கல்லூரி |
| | | மூன்றாமிடம் | திரு D. சசிதரன் கலை அறிவியல் கல்லூரி |

சத்தியமங்கலம் காமதேனு கலை அறிவியல் கல்லூரி 2004 ஜனவரி 8 மற்றும் 9 அன்று ஏற்பாடு செய்திருந்த கல்லூரிகளுக் கிடையிலான கபடிப் போட்டியில் மாருதி கல்லூரியின் கபடி அணி ரன்னர்ஸ் அப் பெற்றது. தோலம்பாளையம் விவேகானந்தா நல மன்றம் 2004 பிப்ரவரி 7 மற்றும் 8 அன்று ஏற்பாடு செய்திருந்த அனைவருக்குமான கபடிப் போட்டியிலும் வெற்றி பெற்றது.

மாருதி கல்லூரியின் கையுந்து பந்து அணி, திருப்பூர் பிரதர்ஸ் வாலிபால் கழகம் 2004 ஜனவரி 24 முதல் 26 வரை ஏற்பாடு செய்திருந்த மாவட்ட அளவு அனைவருக்குமான கையுந்து பந்துப் போட்டியில் ஐந்தாமிடம் பெற்றது. கோயமுத்தூர், இருகூரில் 2004 பிப்ரவரி 18 மற்றும் 19–ல் நடைபெற்ற மாநில அளவிலான கையுந்து பந்துப் போட்டியில் நான்காமிடம் பெற்றது. இப்போட்டியில் இக்கல்லூரியின் BPEd மாணவர் திரு ரஞ்சித் சிறந்த விளையாட்டு வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இந்த அணி கோயமுத்தூர் KMVC Club ஏற்பாடு செய்த, 2004 பிப்ரவரி 20 முதல் 22 வரை நடைபெற்ற மாவட்ட அளவிலான கையுந்து பந்து போட்டிகளில் இரண்டாமிடம் பெற்றது.

1 மார்ச் 2004 அன்று நடைபெற்ற 'SRMV CAS EVER ROLLING TROPHY' போட்டியில் மாருதி கல்லூரியின் கிரிக்கெட் அணி வெற்றியாளராக விளங்கியது.

மாருதி கல்லூரியின் MPEd மாணவர் திரு S. வெங்கடேசன் மற்றும் BPEd மாணவர் திரு S. ரவிசங்கர் ஆகியோர், பீகார், ராஞ்சியில் அகில இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் பாரதியார் பல்கலைக் கழகத்துக்காக விளையாடத் தேர்வு பெற்றனர்.

## இலக்கியம், கலை மற்றும் நுண்திறன் போட்டிகள்

பாலிடெக்னிக் கல்லூரியின் DCRE மாணவர் திரு S. S. கமலக்கண்ணன், மற்றும் DEEE மாணவர் G. சுந்தர் ஆகியோர், ஸ்ரீநாராயணகுரு பாலிடெக்னிக் கல்லூரியில் 28 ஜனவரி 2004–ல் நடத்தப்பட்ட அறிவியல் வினாடிவினா போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றனர்.

கல்வியியல் கல்லூரியின் BEd மாணவர்கள் திரு M. ராமகிருஷ்ணன், மற்றும் திரு P. R. சரவணன் ஆகியோர், கோயமுத்தூர் Citizens Voice Club ஏற்பாடு செய்த 'Consumer Awareness Competitions 2003' என்ற தலைப்பிலான பேச்சு மற்றும் கேலிச்சித்திரம் வரைதல் போட்டிகளில் முறையே இரண்டாம் பரிசு பெற்றனர்.

திரு S. செந்தில்குமார், மற்றும் திரு C. வேலுசாமி ஆகிய கல்வியியல் கல்லூரியின் BEd மாணவர்கள் சேலம் சாரதா கல்வியியல் கல்லூரியால் 6 பிப்ரவரி 2004 அன்று ஏற்பாடு செய்திருந்த, கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகள் – சாரதா FIESTA 2004–ல் மிமிக்ரியில் முதல் பரிசும், பாரம்பரிய நடனத்தில் மூன்றாம் பரிசும் முறையே பெற்றனர்.

## தேர்வு முடிவுகள்

### பத்தாம் வகுப்பு தேர்வு - மார்ச் 2004

| வ.எண். | விபரம் | SRKV உயர்நிலைப்பள்ளி | SSHSS ஆங்கில வழி | SSHSS தமிழ் வழி |
|---|---|---|---|---|
| 1 | மாணவர்களின் வருகை | 40 | 36 | 56 |
| 2 | தேர்ச்சி பெற்றவர்கள் | 40 | 36 | 54 |
| 3 | அதிகபட்ச மொத்த மதிப்பெண் | 481 | 484 | 469 |
| 4 | 100 சதவீதம் மதிப்பெண் பெற்றவர்கள் | 5 (கணிதம் மட்டும்) | 10 (9 கணிதம், 1 அறிவியல்) | 5 (கணிதம் மட்டும்) |
| 5 | வகுப்பின் மொத்த சதவீதம் | 78.20 | 86.42 | 69.40 |
| 6 | 90க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 4 | 14 | 2 |
| 7 | 80க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 12 | 31 | 18 |
| 8 | 70க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 18 | 36 | 30 |
| 9 | 60க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 6 | | 41 |

| வ.எண். | பாடம் | SRKV உயர்நிலைப்பள்ளி | | SSHSS ஆங்கில வழி | | SSHSS தமிழ் வழி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகம் | குறைவு | அதிகம் | குறைவு | அதிகம் | குறைவு |
| 1 | தமிழ் | 90 | 51 | 95 | 66 | 91 | 39 |
| 2 | ஆங்கிலம் | 83 | 49 | 95 | 79 | 84 | 31 |
| 3 | கணிதம் | 100 | 70 | 100 | 84 | 100 | 36 |
| 4 | அறிவியல் | 98 | 60 | 100 | 64 | 98 | 29 |
| 5 | சமூக அறிவியல் | 96 | 46 | 97 | 50 | 98 | 27 |

### பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு - மார்ச் 2004

| வ.எண். | விபரம் | SSHSS |
|---|---|---|
| 1 | மாணவர்களின் வருகை | 127 |
| 2 | தேர்ச்சி பெற்றவர்கள் | 125 |
| 3 | அதிகபட்ச மொத்த மதிப்பெண் | 1138 / 1200 |
| 4 | 100 சதவீதம் மதிப்பெண் பெற்றவர்கள் | 3 (கணிதம்–1, வேதியியல்–1, உயிரியல்–1) |
| 5 | வகுப்பின் மொத்த சதவீதம் | 76.2 |
| 6 | 90க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 7 |
| 7 | 80க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 53 |
| 8 | 70க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 94 |
| 9 | 60க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 115 |

| வ.எண். | பாடம் | SSHSS | |
|---|---|---|---|
| | | அதிகம் | குறைவு |
| 1 | தமிழ் | 186 | 70 |
| 2 | ஆங்கிலம் | 179 | 83 |
| 3 | கணிதம் | 200 | 78 |
| 4 | இயற்பியல் | 199 | 90 |
| 5 | வேதியியல் | 200 | 106 |
| 6 | உயிரியல் | 200 | 106 |
| 7 | கணிப்பொறி அறிவியல் | 194 | 119 |
| 8 | கணக்கியல் | 199 | 75 |
| 9 | வணிகவியல் | 194 | 57 |
| 10 | புள்ளியியல் | 186 | 87 |

## முன்னாள் மாணவர் சங்கக் கூட்டங்கள்

வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் மாணவர் சங்கக் கூட்டம் 17 ஏப்ரல் 2004 அன்று நடத்தப்பட்டது. இதில் 34 முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாலிடெக்னிக் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டம் 15 பிப்ரவரி 2004 அன்று GKD கலையரங்கில் நடைபெற்றது. இக்கல்லூரியின் குறிப்பிடத்தக்க முன்னாள் மாணவர்கள் திரு V. சுந்தரம், மற்றும் திரு மாணிக்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் பாராட்டப்பட்டுள்ளனர்.

கல்வியியல் கல்லூரியின் 2004–ம் ஆண்டுக்கான முன்னாள் மாணவர் சங்கக் கூட்டம், 15 பிப்ரவரி 2004 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் 72 முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்வு முடிவுகள்

2004 மார்ச்சில் நடைபெற்ற மேல்நிலைத் தேர்வு முடிவுகள் 11 மே 2004 அன்று வெளியிடப்பட்டது. சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளியில் 127 மாணவர்கள் தேர்வு எழுதியதில் இருவர் மட்டுமே தோல்வியுற்றனர். இப்பள்ளியில் அதிகமான மதிப்பெண்ணாக திரு M. அருணாசலம் 1138/1200 மதிப்பெண் பெற்றார்.

BPEd மற்றும் MPEd தேர்வு முடிவுகள் ஜுன் மாதம் வெளியிடப்பட்டது. மொத்தம் 98 மாணவர்களில் 7 பேர் சிறப்பு நிலையிலும், 89 பேர் முதல் வகுப்பிலும் 2 பேர் இரண்டாம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றனர்.

## நியமனங்கள்

பண்ணை மேலாளர் (Field Supervisor) பணிக்குத் தேர்வு செய்வதற்காக வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனத்தில் பயிலும் மாணவர்களுக்கு வளாக நேர்முகத் தேர்வுகள் சேலம் M/s Rasi Seeds, விழுப்புரம் M/s Maxi Yield Farm Solutions, திருச்சி M/s Symbiosis Agro Management, மற்றும் கர்நாடகா M/s Shanan Agro Products Private Limited போன்ற பல்வேறு தொழில் நிறுவனங்களால் நடத்தப்பட்டது.

தார்வார் 'Spicer India Industries'–ன் மனிதவள மேம்பாட்டுத்துறை முதுநிலை மேலாளரால் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்வளாக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் 6 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1 பிப்ரவரி 2004 அன்று பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மாருதி உடற்கல்விக் கல்லூரியின் திரு M. முருகன் HPEd, திரு P. ஏழுமலை, திரு செந்தில் பாலாஜி MPEd, மாணவர்கள், கல்லூரியின் வேலைவாய்ப்புப் பிரிவின் மூலம் கோவை மாவட்டத்திலுள்ள வெவ்வேறு பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர்களாக நியமனம் பெற்றனர்.

கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கான வளாக நேர்முகத் தேர்வு தர்மபுரி AMG மெட்ரிகுலேஷன் பள்ளியால் 20 பிப்ரவரி 2004 அன்றும், மற்றொரு வளாகத் தேர்வு தர்மபுரி விஜய் வித்யாலய மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியால் 22 பிப்ரவரி 2004 அன்றும் நடத்தப்பட்டது.

கலை அறிவியல் கல்லூரியின் 79 MCA மாணவர்களில் (2001 முதல்) நான்குபேர் தவிர மீதி அனைவரும் பல்வேறு நிறுவனங்களில் பணி ஏற்றுள்ளனர், மற்றும் அயல்நாடுகளில் மேற்கல்விக்காகச் சென்றுள்ளனர்.

இதுபோன்றே, 2001 முதல் கல்வியியல் கல்லூரியில் பட்டம் பெற்ற 354 BEd மற்றும் 60 MEd மாணவர்களில் 298 பேர் பணியமர்ந்துள்ளனர். 33 பேர் மேற்கல்வி பயின்று வருகின்றனர்.

### பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களின் விபரம்

#### வித்யாலய உயர்நிலைப் பள்ளி


E. அருண்
461 / 500


S. கார்த்திகேயன்
459 / 500


P. பரத்குமார்
453 / 500

#### சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி (தமிழ் வழி)


R.விக்னேஷ்
469 / 500
Centum in Maths


A. ஆனந்தகுமார்
457 / 500
Centum in Maths


V. தினேஷ்
449 / 500
Centum in Maths


D. கார்த்திக்
Centum in Maths


R.மோகன்ராஜ்
Centum in Maths

#### சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி (ஆங்கில வழி)


484 / 500
S. வெங்கடராமன்
Centum in Maths & Science


481 / 500
S. அருண்பாபு
Centum in Maths


471 / 500
J. வெங்கடராமன்
Centum in Maths


A. பார்த்திபன்
Centum in Maths


R. தீனதயாளன்
Centum in Maths


P. சந்தோஷ்
Centum in Maths


M. வித்யாநந்தினி
Centum in Maths


B. உமாமகேஸ்வரி
Centum in Maths


M. ஸ்ரீ சாந்திகாலக்ஷ்மி
Centum in Maths

## வழியனுப்பு விழா



முனைவர் திரு S. ஜெயராமன், முதல்வர், கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 31 மே 2004 முதல் தன் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் சூரிய சக்தித் துறையில் மிகுந்த புலமை பெற்றவர். தனிப்பட்ட முறையில் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குச் சென்றிருக்கும் இவர் திரும்பி வந்த பிறகு இத்துறையில் தொடர்ந்து பணியாற்ற வித்யாலயம் அவரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

திரு R. பழனிசாமி, கணக்காளர், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனம், 31 ஜனவரி 2004 முதல் தன் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு P. கிருஷ்ணமூர்த்தி, கள அலுவலர், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனம், 29 பிப்ரவரி 2004 முதல் பணி ஓய்வு பெற்றார்.

திரு K. ஜகதீசன், சிவில் இஞ்சினியரிங் துறைத் தலைவர், பாலிடெக்னிக் கல்லூரி, மே 2004 முதல் பணி ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெறும் இந்த அலுவலர்கள் அளித்த மதிப்பு மிக்க சேவையை வித்யாலயம் என்றும் நினைவு கொள்ளும்.

## நகர மையம்

கலை அறிவியல் கல்லூரி 13 மார்ச் 2004 அன்று நகர மையத்தில் தூய அன்னை சாரதா தேவி தொடர்பான, கல்லூரிகளுக்கிடையேயான கவிதைப் போட்டி ஒன்றை நடத்தியது. இதில் 17 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு பெற்றனர்.

மாணவர்களுக்கான ஆன்மீகக் கூட்டம் ஒன்று காந்தி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தால் 30 மே 2004 அன்று நகர மையத்தில் நடத்தப்பட்டது. அதே நாளில் 'Sacred Touch' என்ற நூலிலிருந்து வினாடிவினாப் போட்டி ஒன்றும் நடத்தப்பட்டது.

❀ ❀ ❀



சுவாமி அகண்டானந்தர்

குருதேவர்தான் (ஸ்ரீராமகிருஷ்ணர்) தமது பணிக்காக என்னை இன்னும் வைத்துள்ளார். பிறருக்காக உனது இதயத்தை திறந்துவை. அதேபோல் உனக்குள்ளும் பிறருடைய இதய உணர்ச்சிகளை வாங்கிப்பழகு. இதை மட்டும் நீ செய்து பார். எத்தனை மனமகிழ்ச்சியை அடைவாய் என்பதைப் பிறகு அறிந்து கொள்வாய். ஆனால் எப்பொழுதும் உன்னை பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் நீயே உன்னை பந்தப்படுத்திக் கொள்கிறாய் என்பதை நினைவில் கொள். எவ்வளவு தூரம் மக்களுடன் கலந்து பழகுகிறாயோ, அகன்று விரிந்து பரவுகிறாயோ அவ்வளவு தூரம் ஆனந்தத்தை இதயத்தில் உணர்வாய். அதுமட்டுமல்ல, இதன் மூலம் நீ இறையனுபூதி பெறுவதும் நிச்சயம்.

***– சுவாமி அகண்டானந்தர்***

*சுவாமி விவேகானந்தரின் சகோதர சீடர்*

---

இறைவா, எனக்கு ராஜ்யம், சொர்க்கம் என்று எதுவுமே வேண்டாம். அனைவரும் விரும்புகின்ற முக்திகூட எனக்குத் தேவையில்லை. ஆனால் என்னை இந்த உலகில் வாழும் எல்லா உயிர்களின் துன்பத்தையும் துடைக்குமாறு செய். அதுவே நான் உன்னிடம் வேண்டுவது.

*– தவத்திரு சுவாமி அகண்டானந்தர், ரந்தி தேவ முனியின் வாக்கான இதை குஜராத் மாநிலம், ஜாம் நகரைச் சேர்ந்த தலைசிறந்த மருத்துவரான ஜண்டு பட் என்பவர் தினமும் பிரார்த்திக்க கேட்டுள்ளார்.*

## உள்விளையாட்டு அரங்கம்



நமது வளாகத்தில், கூடைப்பந்து, கையுந்து பந்து, இறகுப்பந்து, மென்பந்து போன்ற விளையாட்டுக்களுக்கான வசதிகளுடன் கூடிய உள்ளரங்க விளையாட்டுக்கூடம் ஒன்று 1.36 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. கோவையைச் சேர்ந்த, கூடைப்பந்து விளையாட்டினை மேம்படுத்திய விளையாட்டு ஆர்வலர் திரு S. வெங்கடகிருஷ்ணன் அவர்களது பெயர் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் அவர்களால் 3 மார்ச் 2004 புதன் அன்று இவ்வரங்கம் திறந்து வைக்கப்பட்டது. சென்னை, மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் அவர்கள் கூடைப்பந்து அரங்கத்தையும், சென்னை SDAP–ன் உறுப்பினர் செயலர் திரு P. W. C. தவிதார் I.A.S, அவர்கள் கையுந்து பந்து அரங்கத்தையும் திறந்து வைத்தனர். ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் செயலாளர் சுவாமி ஆத்மாராமானந்தர் அவர்கள் வந்திருந்தோரை வரவேற்றார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு N. முருகானந்தம் I.A.S,



அவர்கள் முக்கிய உரை நிகழ்த்தினார். திரு P. W. C. தவிதார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் அவர்கள் தலைமை உரை வழங்கினார். கோவை ELGI Equipment நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் கோவை மாவட்டக் கையுந்து பந்துக் கழகத்தின் தலைவருமான முனைவர் ஜெயராம் வரதராஜ் அவர்கள் நன்றி நவின்றார். விளையாட்டுத் துறையில் சிறப்புப் பெற்ற நம் முன்னாள் மாணவர்கள் A. ராஜ்குமரன், R. பரத்வாஜ், R. குமார், R. சதீஷ்குமார் ஆகியோர் பாராட்டப் பெற்றனர்.




## பவள விழா – திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்

எனவே, இந்தப் பவள விழாவை 2004–2005–ஆம் ஆண்டு முழுவதும் கொண்டாடும் பொருட்டு ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இவற்றில் சிறப்பு விழாவானது 2005 பிப்ரவரி 3–ஆம் தேதி வியாழன் முதல் பிப்ரவரி 6–ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெற உள்ளது. திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் கீழ்வருமாறு:

- ☞ ஆன்மீகம் : ஹோமம், பூஜை முதலியன
- ☞ கல்வி : பொருட்காட்சி, கருத்தரங்கு, கல்விசார் கருவிகள் வினியோகித்தல், மாநில அளவிலான போட்டிகள், தொழில் தொடர்பான தாள் வாசித்தல்/தொழில் சாராத பொருளில் வாசித்தல், புதிய வெளியீடுகள்
- ☞ கலை நிகழ்ச்சிகள் : பாரம்பரிய இசை, நடனம், நாடகம், பட்டி மன்றம், நாட்டுப்புறக் கலைகள்
- ☞ விளையாட்டு : விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், ஊனமுற்றவர்களுக்கும் சிறப்பு போட்டிகள் நடத்துதல்
- ☞ சேவைப்பணி : வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒன்று அல்லது இரண்டு பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல், இலவசக் கல்வி வழங்குதல், ஆடைகள் வழங்குதல், அன்னதானம்

வித்யாலய நிறுவனங்கள் அவற்றின் விருப்பப்படி, மேற்கண்ட நிகழ்ச்சிகள் வித்யாலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

**சுருக்கமாகச் சொன்னால் 2004–ம் ஆண்டில் முற்பகுதி முழுவதும் கல்விச் செயல்களாகவே அமைந்துள்ளது. 2004–ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதியில் நம் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறந்த பின்னர், மேலும் பல செயல்பாடுகளை அடுத்து வெளியிடப்படும் 'வித்யாலயச் செய்திகள்' இதழில் காண முடியும்.**

மேலும் விபரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்
*சுவாமி ஆத்மாராமானந்தர்*
செயலர், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயம்புத்தூர் - 641 020
போன் : 0422-2692676, 2695451-3; ஃபேக்ஸ் : 0422-2692582; ஈ-மெயில் : <srkv20@md3.vsnl.net.in>; வெப்தளம் : www.srkv.org